# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

10வது ஆண்டில்

விளம்பரம் VLAMBARAM

(416) 282-8059
(416) 282-4978


மக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 DECEMBER 01, 2000 பாலம் 23



- கிரகங்களிலும் இரண்டு உலகங்கள்? (பக். 09)
- விரும்பிய படத்தை விரும்பிய நேரத்தில் பார்க்கலாமா? (பக். 02)
- அக்குபங்ஷர் வைத்தியமும் தமிழரும் (பக். 05)
- மீண்டும் ஜீன் கிறைச்சியானிற்று வெற்றி (பக். 13)
- ரஜினியின் மூன்று முகங்கள் (பக். 07)
- 2001ஆம் ஆண்டில் வீட்டின் விலை அதிகரிக்குமா? (பக்.17)
- குறைந்த முற்பணத்துடன் வாகனம் வாங்கலாமா? (பக். 03)
- திருமண அழைப்பிதழ் - ரூபன் & ரூபி (பக் 12)





RE/MAX Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற

Raja M. Mahendran, P. Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME
MEMBER OF RE/MAX PLATINUM CLUB

(416) 491-4002
Pager: (416) 589-4270



இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
சபோனாவிற்கு!
SABONA & Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 B Eglinton Ave. E., Scarborough


## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- எல்லோராலும் புகழப்பட்ட மனிதனோ எல்லாராலும் இகழப்பட்ட மனிதனோ முன்பு ஒரு காலத்திலும் இருந்ததில்லை, இனியும் இருக்கப்போவதில்லை.
- இசையை உண்டுபண்ணும் சொற்களுக்கு இடையில் நிருப்தமான இடைநேரம் உண்டு. அதுபோல் வேலைக்கிடையில் ஓய்வும் வேண்டும்.
- பூலோக வாழ்வு என்பது ஒரு பாலம். கடந்து செல்லுதற்குப் பாலம் ஏற்பட்டிருக்கிறது. அதிலேயே தங்கியிருப்பதற்குப் பாலம் ஏற்பட்டதன்று.
- உரம் போன்றது செல்வம். குவிந்துள்ள உரம் பயன்படாது. நிலத்தில் பரப்பப்படுகிற உரம் பயன்படுகிறது. சேமித்துள்ள செல்வம் பயன்படவேண்டுமானால் தாராளமாக அது வழங்கப்பட வேண்டும்.

## வெற்றிக்கான மூன்று வழிகள்



*இலட்சியத்தில் வெற்றி பெறுவதற்கு மூன்று வழிகள் உள்ளன.*

1. அமைதியுடனும் நேர்மையுடனும் உங்களின் இப்போதைய கடமையைச் செய்து முடியுங்கள்
2. வெற்றியில் 'கனத்து' விடாமலும், தோல்வியில் 'துவண்டு' விடாமலும் உங்கள் இதயத்தை இளமையாகவும், துடிப்புடனும் வைத்துக் கொள்ளுங்கள்.
3. உங்களின் சிறுவயதுக் கனவில் எதை முதலில் அடைய வேண்டும் என்று நினைத்தீர்களோ, அதை அடைய அமைதியுடனும், நேர்மையுடனும் அதற்கான முயற்சியுடன், முழு ஈடுபாட்டுடன் இறங்குங்கள்.

## உன்னை அறிந்தால்

எந்த ஒரு கட்டிடமும் ஒரு நாள் கட்டி முடிக்கப்படுவதில்லை ஒருவன் தன்னுடைய உடம்பை அழகாக, அளவோடு வைத்திருக்க வேண்டுமாயின் தொடர்ச்சியான, தேக அப்பியாசமும், அளவான உணவும், தகுந்த பொழுதில் உணவு உட்கொள்ள வேண்டும். இவை எல்லாம் வாழ்க்கையின் பாடங்கள். நிலையான எந்த நிகழ்வும் நிறைவேற்ற குறிப்பிட்ட காலம் எடுக்கும். அதற்கு பொறுமை வேண்டும். ஒருவர் உடனடியாக செல்வந்தர் ஆகவேண்டும் என்றால், அது இலேசான காரியம் என்று கூறமுடியாது. விதிவிலக்குகள் எப்பொழுதும் விதிவிலக்கே.

இவ்வாழ்க்கை ஒரு தடமையே வரும். வாழ்க்கை முழுக்க எங்களால் தொழில்புரிய முடியாது. உடம்பு இடம் கொடுக்காது. பருவத்தே பயிர் செய் என்று கூறப்பட்டுள்ளது. நாம் உழைக்கும் காலத்தில் எங்களின் பிள்ளையை காலத்திற்கு சேமிப்பது மிக முக்கியம். உழைத்து பெறும் பணத்தில் முதலாவதாக எமக்கென்று குறைந்தது 10% ஆவது சேமிக்கப்பழக வேண்டும். இது மிகமிக முக்கியம். சேமிக்கும் முறைகள் வித்தியாசமாக இருக்கலாம். ஆனால் சேமிக்கப்பழகிக் கொள்வது உங்களையும், உங்களுடன் சார்ந்தவர்களிற்கும் நீங்கள் செய்யும் உதவியாக இருக்கும். **நல்லதைச் சிந்திப்போம்.. நல்லதே நடக்கும். நாளை நமதே.**

-நெற்றிக்கண்ணன்

**உலக தமிழோசை மூலம் ஆக்கங்கள் தருபவர்கள் பிரதி சனி தோறும் 12:15மணிக்கு CTBC இல்**




SINGAPORE CELLUAR

$29.00
Mon. - Fr. 6:00 p.m to 8a.m FREE
Sat. & Sun. FREE & Much More

$49.00
3 Months Service
Numeric + Voice
+ Activation FREE PAGER

$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே

CANTEL
Bell Mobility

Mobile Message, Call Waiting, Call Display
per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378

HOTLINE: (416) 980-1234



துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221





சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்**
(கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527. 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com




# அறிவும் ஆக்கமும் (69)

-விஜே குலத்துங்கம்

CD பிளேயர், DVD player, வீடியோ போன்றவற்றை எல்லாம் 2010 ஆண்டளவில் தொலைக்காட்சிச் சேவை விழுங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்னும் பத்து வருடங்களில் தொலைக்காட்சியில் 30,000 சனெல்கள் (Channels) இருக்கும் என எதிர்பாார்க்கப்படுகின்றது.

தற்போது internet இல் பல தொலைக்காட்சிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தென் இந்திய தொலைக்காட்சிச் சேவைகளான சன் டி.வி, ராஜ் டி.வி போன்ற தொலைக்காட்சிச் சேவைகளைக் கூட internet ஊடாக 24 மணிநேரமும் நேரடியாக பார்க்கமுடிகின்றது. intenet இல் பார்க்கும் போது நேரடி ஒளிபரப்பை மாத்திரம் அல்ல, தவறவிட்ட நிகழ்ச்சிகளைக் கூட எந்த நேரமும் பார்க்க முடியும். நடந்து முடிந்த நிகழ்ச்சிகளை டிஜிடல் வடிவத்தில் இணையப்பத்தில் பதிவு செய்து வைத்திருப்பார்கள். நீங்கள் அந்த நிகழ்ச்சியை எந்த நேரமும் பார்த்துக் கொள்ளலாம். அதைவிட திரைப்படங்களைக் கூட வரிசைப்படுத்தியுள்ளார்கள். வேண்டிய திரைப்படங்களைப் பார்த்துக் கொள்ளலாம்.

இப்படியான தவறவிட்ட நிகழ்ச்சிகளை பார்க்கக்கூடியதா எதிர்காலத்தில் தொலைக்காட்சிச் சேவையிலும் வரவிருக்கின்றன. ஏற்கனவே அமெரிக்காவில் சில இடங்களில் இந்த வசதிகள் இருக்கின்றன. தற்போதும் கனடாவில் இதன் முதற்படியாக pay-preview என்ற வசதி உள்ளது. தற்போது 15 மேற்பட்ட channel களில் வெவ்வேறு படங்களைப் போடுவார்கள். நீங்கள் குறிப்பிட்ட படத்தை குறிப்பிட்ட நேரத்திற்கு தெரிவு செய்தால் உங்கள் தொலைக்காட்சியில் அந்தப் படம் வரும். ஆனால் அவர்கள் போடும் படங்களை மட்டும் நீங்கள் பூார்க்க முடியும். எதிர்காலத்தில் விரும்பும் படத்தை தெரிவு செய்யக் கூடியதாகவரும். இப்படியாக நிலை வரும் கட்டத்தில் உங்களுக்கு VCR இன் தேவை, வீடியோ கருவியின் தேவை இருக்காது. வேண்டிய படத்தை விரும்பிய நேரத்தில் தொலைக்காட்சியூடாக பெற்று பார்வையிடலாம். இதே போல்தான் நடந்து முடிந்த நிகழ்ச்சிகளையும் பதிவு செய்து வைத்திருப்பார்கள். வேண்டியவற்றை நீங்கள் தெரிவு செய்து பார்க்கலாம். அடுத்த ஆண்டளவில் டொரன்டோவில் 24 மணிநேர தமிழ் தொலைக்காட்சிச் சேவை வர இருக்கின்றதென அறிகின்றோம். எனவே தமிழ்ப்படங்களை பார்க்கக்கூடிய வசதியும் எதிர்காலத்தில் வரும். பெரிய தொலைக்காட்சி நிறுவனங்கள் 50 வருடங்கள் வெளிவந்த படங்களை டிஜிட்டல் முறையில் மாற்றி அவற்றை வாடிக்கையாளர்களுக்கு தொலைக்காட்சியூடாக காட்டக்கூடியதாக வரும் என கூறுகின்றார்கள். அத்துடன் 600 மணித்தியாலங்களுக்குரிய நடந்து முடிந்த நிகழ்ச்சிகளையும் எந்நேரமும் பார்த்துக்கொள்ள முடியும் எனக் கூறுகின்றார்கள். இப்படியான பல வசதிகள், கடைகளுக்குரிய channelகள், தனித்தனி விடயங்களுக்கு தனியாக channel கள்என்று 30,000 வரை channel இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் உலகம் பூராகவும் உள்ள நாடுகள் அனைத்திலும் சகல channel களையும் பார்க்கக் கூடியதாகவும் இருக்கும்.





தற்போது உள்ள 100க்குக் குறைவான சேவைகளையே தெரிவு செய்து பார்க்க கஷ்டமாக உள்ளது. எப்படி 30 000 சேவைகளை ஆராய்ந்து தெரிவு செய்வது. அல்லது றிமோட் கொன்ரோலால். தெரிவு செய்வது என்ற கேள்வி எழும். அந்தக் காலகட்டததில் வரும் தொலைக்காட்சிப் பெட்டிகளில் Voice command எனப்படும். நீங்கள் வாயால் கூறும் கட்டளைகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய அம்சம் காணப்படும். முதலில் உங்களின் குரலை அதற்கு பழக்கப்படுத்திவிட்டு 20 நிமிடங்களுக்கு தரப்படும் கேள்விக் கொத்திற்கு உங்கள் விருப்பம், ரசனை போன்ற விடயங்களை தெரிவித்துவிட்டால், அதற்கேற்ற சேவைகளை மாத்திரம் உங்களுக்கு தெரிவுசெய்து தரும்.

இதைவிட உங்களுக்கு தேவையான பாடல்கள், இசைகளைக்கூட நீங்கள் தொலைக்காட்சியில் கேட்கக் கூடியதாக வரும். தற்போதும் கூட செய்மதியினூடாக வரும் சேவை, மற்றும் கேபிள் சேவையில் டிஜிட்டல் பொக்ஸ் வைத்திருந்தால், அவர்கள் 30 channel கள் வரை தனியே இசையை மாத்திரம் வழங்குவதாக அமைத்துள்ளார்கள். ஒவ்வொரு channel குறிப்பிட்ட வகை classic, pop, Rap என்று ஒலிபரப்புகின்றது. ஆனால் தற்போது அவர்கள் போடும் பாடல்களையும், இசையையும் மாத்திரமே கேட்கக் கூடியதாகவுள்ளது. ஆனால் எதிர்காலத்தில் நாம் விரும்பும் பாடலை தெரிவு செய்து கேட்கக் கூடியதாக வர இருக்கின்றது. எனவே எதிர்காலத்தில் நாம் பிரத்தியேகமாக CD player போன்றவற்றை வைத்திருக்கத் தேவையில்லை. தொலைக்காட்சியிலேயே சகல பாட்டுக்களையும் கேட்கக் கூடியதாக வரும்.

தற்போது மின்கணணியைப் பாவித்து பெறப்படும் Internet சேவைகளையும் எதிர்காலத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகளினூடாகப் பெறக் கூடியதாக இருக்கும். தற்போதும் கூட, ஒரு பிரத்தியேக உபகரணம் ஒன்றின் மூலம் தொலைக்காட்சியில் internet வசதிகளைப் பெறலாம். ஆனால் எதிர்காலத்தில் தொலைக்காட்சி சேவையை வழங்கபவர்களே நேரடியாக internet சேவையையும் வழங்குவார்கள். அதுமாத்திரமல்ல ஒரு குறிப்பிட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சி நடைபெறும் போது, அதனுடன் சம்பந்தப்பட்ட internet செய்த்திகள், தகவல்கள் போன்றவற்றையும் download செய்து கொள்ளக் கூடிய வசதியும் வரும்.

முன்பெல்லாம் தாயகத்தில் வானொலி நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேயர்கள் நேரடியாக வானொலி நிலையத்திற்கு செல்லவேண்டும். தற்போது இங்கு தொலைபேசி மூலம் நேயர்கள் போட்டி நிகழ்ச்சிகளிலும், மற்றைய நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கின்றார்கள். கலைஞர்கள் கூட வீட்டிலிருந்து அல்லது வேலையிடத்தில் இருந்து செய்திகளை வாசிக்கின்றார்கள். இதேபோல் எதிர்காலத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகளுடன் இணைக்கப்பட்ட வீடியோ கமெராவின் மூலம், வீட்டில் இருந்தே தொலைக்காட்சிப் போட்டி நிகழ்ச்சிகள், மற்றைய நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்து கொள்ளக் கூடியதாக வரும்.

எனவே இவற்றையெல்லாம் பார்க்கும்போது, எதிர்காலத்தில் தனியே ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை மாத்திரம் வைத்திருந்து அதன் மூலம் ஒரு VCR, CD player, DVD player, மின்கணணி போன்றவை செய்யும் வேலைகளை செய்து கொள்ளலாம் என தெரிகின்றது.

**"ஆறிவும் ஆக்கமும"** பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான வீடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை வீஜே குலத்துங்கம் –361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு e-mail அனுப்பவும்.


13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்** புதிய இடத்தில்

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 114

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | ■ | | 3 |
| | ■ | ■ | | ■ | 4 | ■ | |
| 5 | | | | | ■ | 6 | |
| | ■ | ■ | | ■ | 7 | | |
| ■ | | ■ | ■ | 8 | | | ■ |
| 9 | | | | | ■ | ■ | |
| ■ | | ■ | ■ | ■ | 10 | 11 | |
| ■ | 12 | | | | ■ | | 13 |

**இடமிருந்து - வலம்**

1. கிழக்கு தமிழ் ஈழத்தின் ஒரு ஊர்
3. புழுதி (வல- - இட) 4. பசு
5. பகிர்ந்து கொடுத்தல்
6. மன்னரின் தலையில் அணிவது
7. பிரதி 8. படகு
9. போட்டியில் வென்றவர் அணிவது
10. பெண்களின் உடை 12. அழுக்காறு
13. நீர் மெதுவாக ஊறு (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. மழை நீரில் சூரிய ஒளி தெறிப்பால் தெரிவது
2. ஊழியன்
3. இது மீன் பிடிக்க உதவும்
6. அகத்தின் அழகு தெரியும் இடம்
7. காலால் செல் 8. சரி
11. படி
12. மருந்து (கீழ் - மேல்)
13. இறுதி (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் DECEMBER 25, 2000க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ரோ | க் | கி | ய் | வா | ழ் | வு |
| ன | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | த |
| ந் | ■ | ல் | ர | வி | டை | ட் | க |
| த | ■ | த | ■ | ழு | ■ | ■ | ■ |
| ம் | ■ | மு | த் | தி | ரை | ■ | ம் |
| ■ | தை | ■ | ■ | ■ | தி | கு | த |
| ழி | வி | ■ | கா | ■ | த | ■ | ட |
| மே | க | ம் | ■ | ர் | யா | வை | ஔ |

**113இல் வெற்றி பெற்றோர்**

1) Alagarsamy Pattan, Toronto, Ont.
2) K. Muhilan. Scarborough, Ont.

*ஆட்டிறச்சி வியாபாரத்தல் தமிழ்மக்களின் உள்ளங்களை வென்றவர்!

* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!

* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*


*[Ken-Mark Plaza]*

SUBA

DJ SERVICES

வண்ணக்கோலம்

திருமணம். பூப்புனித நீராட்டு விழா.
அரங்கேற்றம் மற்றும் அனைத்து சமய வைபவங்களுக்கும்
அழகிய முறையில் கோலம் செய்து தரப்படும்.



Pl.Call:(416)431-9451/565-4869

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5



## நியூ மிலேனியத்தில் ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**

**NTE AUTO INC.**
**New Trade Engineering**

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

Contact: Sivabalan சிவபாலன்

**Tel: (416) 750 - 1573**

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough



## குறைந்த மாதக்கட்டணத்துடனும் குறைந்த முற்பணத்துடனும் வாகனம் வாங்க முடியும்



மிககுறைந்த முற்பணம் உள்ளவர்கள் வாகனங்களை வாங்கும் போது மிக குறைந்த மாதக்கட்டணங்களையும் எதிர்பாக்கின்றனர். அப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களின் முடிவு எதுவெனில் வாகனத்தை leaseக்கு எடுப்பதாகும். ஆனால் சிலருக்கு lease இல் வாகனத்தை எடுப்பது விருப்பம் இல்லாத ஒரு விடயமாகவும் இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கும் ஒரு வழி இருக்கிறது. அதைக்கூறுவது Baloon Finance என்பது. இம்முறையின் மூலம் வாகனம் வாங்கும் போது சிறிய தொகை முற்பணத்துடன் நீங்கள் 5 வருடத்திற்கு மாதாமாதம் சிறிய தொகையினை செலுத்தி 5ஆவது வருடம் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகையினை முழுமையாகச் செலுத்தியோ அல்லது அத்தொகையினை மாதாந்தக்கட்டுப்பணம் செலுத்தியோ பெற்றுக்கொள்ள முடியும். அதேவேளை இப்படியான ஒரு கட்டத்தில் நீங்கள் பலவிடயங்களை கருத்தில் கொள்ளவேண்டும். அதாவது எப்படிப்பட்ட ஒரு திட்டத்தில் நீங்கள் கைபெழுத்து இட்டுள்ளீர்கள் என்பது முக்கியம். Baloon Finance இல் பலவகையானவைகள் உண்டு. ஆகவே எதில் நீங்கள் உள்ளீர்கள் என்பது முக்கியமானவிடயமாகும். நம்பிக்கையான ஒருவர் மூலம் பெறுவதனால் சிக்கலை தடுக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு- சோதீஸ் Cell ... 704 - ..79


**PRAYER for PROTECTION**

My loving Miraculous Infant Jesus. I humbly prostrate at your feet I know That you are more powerful, more loving and graceful than any one I can imagine of. I will honour you I will love you more than ever before.

I earnestly ask you to be with me specially when I need you most It is only your care and love that I seek.

Be with me, protect me, guard me guide me and shelter me.—Amen.

Novena to Infant Jesus
Every Thursday at 6.00 p.m.

Devotion to Divine Mercy
Every First Friday at 5.30 p.m.
followed by Eucharistic Half Hour of
Prayer Benediction and Mass
at St. Lawrene's Church, Wellawatta.



## இயேசுவின் அருளுரை

* நீ செய்பவை உனக்குத் தெரியாதன.
* உன் கண்ணில் இருக்கின்ற உத்திரத்தை எடுக்காமல், அடுத்தவன் கண்ணில் உள்ள துரும்பை எடுக்கத் துணியாதே.
* கேளுங்கள் கொடுக்கப்படும் தேடுங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் திறக்கப்படும்.
* இறைவன் உங்கள் தேவைகளை அறிவார்.
* நீங்கள் செய்ய வேண்டியது, கேட்டும், தேடியும், தட்டியும் பெற்றுக் கொள்வதேயாகும்.

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?



- சிவ பஞ்சலிங்கம்

பகுதி (41)

கடந்த அத்தியாயத்தில் வீதி ஒழுங்கு சட்டங்களை மீறி தண்டனை ரிக்கற் பெறுவதும் சில நேரங்களில் கடுமையான குற்றங்களுக்கு விசாரணைக்கு நீதிமன்ற "அழைப்பு ஆணை" பிறப்பிக்கப்பட்டு விசாரணைக்கு செல்லும் போது எத்தகைய விடயங்களில் நாம் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதன் முதல் மூன்று பகுதிகளையும் பார்த்தோம்.

அதாவது குற்றசாட்டு, அதன் தன்மை, வலிமை பற்றிய விபரம் விசாரணைக்கு நேரடியாக சமூகம் அளிப்பதா அல்லது எவராவது நீதிமன்ற முகவர் அல்லது வக்கீல் மூலம் வழக்கினை நடத்துவது மற்றும் வழக்கு தொடர்பாக பெற்று வைத்திருக்க வேண்டிய பத்திரங்கள் பற்றிய விடயங்களை பார்த்தோம். தற்போது அதன் நான்காவது பகுதிக்கு செல்வோம்.

4) **சாட்சிகள்:-**

ஒரு வீதி விபத்து தொடர்பான வழக்குகளில் பின்வருவோர் அனேகமாக அரச தரப்பினரால் தங்களுக்கு எதிரான குறிப்பிட்ட குற்றச்சாட்டில் சாட்சியளாக அழைக்கப்படும் சந்தர்ப்பங்கள் உண்டு.

* விபத்தில் சம்பந்தப்பட்ட ஏனைய வாகன சாரதிகள்
* விபத்தில் சம்பந்தப்படாத விபத்தினை நேரடியாக பார்த்த தனிநபர் சாட்சிகள்
* விபத்தினை விசாரணை செய்யும் பொலீஸ் உத்தியோகத்தர்

மேற்குறிப்பிட்ட சாரதிகள் தவிர சில நேரங்களில் அரச வழக்கு தொடுநர் விபத்து விடயங்களில் நிபுணத்துவம் வாய்ந்த பொலீஸ் உத்தியோகத்தவர்களை இக் குறிப்பிட்ட விபத்து எப்படி நடந்திருக்கலாம் என அபிப்பிராயம், ஆலோசனை பெற விசேடமாக அழைக்கலாம். இவ் விபத்து விடயங்களில் விசேடத்துவம் பெற்றவர்களை "RE CONSTRUCTIONIST" என அழைக்கப்படுவார்கள்.

இத்தகைய "RECONSTRUCTIONIST" என்று குறிப்பிடப்படும் வீதி விபத்துகளில் விசேடத்துவம் பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர் சாட்சியம் வழங்க முன் வருகின்றார் என்றால் வீதி விபத்து நீதிமன்ற ஏஜென்ர் அல்லது வக்கீலின் ஆலோசனைகள் உதவிகளை பெறுவது முக்கியமானதாகும்.

பொதுவாக வீதி விபத்துகளில் பாதிக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்காக நிறுத்தப்பட்டிருப்பவர்கள் இச் சாட்சிகள், வழங்கப் போகும் சாட்சியங்கள், அறிக்கைகள் பற்றி பரிசீலனை செய்வதற்கோ அல்லது , சாட்சிகள் இணங்கினால் அவர்களுடன் நேரடியாக கலந்து ஆலோசிப்பதற்கோ உரிமை உண்டு.

வீதி விபத்துகளில் குற்றம் சாட்டப்பட்டு நிறுத்தப்பட்டவர் தம்மை பாதுகாத்து கொள்ள சாதகமாக ஏதாவது புகைப்பட பிரதிகள் இருந்தால் அதனையும் நீதிமன்றத்தில் சமாப்பிக்கலாம். ஆனால் இப் புகைப்படம் எப்போது? எங்கே? எந்த கோணத்திலிருந்து எத்தகைய வில்லைகள் உபயோகிக்கப்பட்டு படம் பிடிக்கப்பட்டது போன்ற விபரங்களும் புகைப்பட பிரதிகளை சாட்சியங்களாக சமர்பிக்கப்படும் போது பரிசீலனை செய்யப்படுவது முக்கியமானதாகும்.

சில சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டப்பட்டவர் தம்மை பாதுகாத்து கொள்ள சில வாகனம் தொடர்பான நிபுணத்துவம் வாய்ந்த அதே குறிப்பிட்ட அவரது வாகனத்தினை பரிசீலனை செய்யும் லைசென்ர் மெக்கானிக் போன்றோரை சாட்சியாக அழைக்கலாம். உதாரணமாக கவனமற்ற வாகனம் செலுத்துகையில் (careless driving) எதிர்பாராத விதமாக "பிரேக்" தொழில்படவில்லை என்ற நிலைமை உருவாகியிருந்தால் அதனை லைசென்ஸ் மெக்கானிக் மூலம் சாட்சியமாக வழங்கலாம். இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவர் தமது சாட்சியத்தினை அழைத்து வந்து தம்முடைய குற்ற சாட்டுக்களை தவிர்த்து கொள்ள உபயோகப்படுத்தும் நிலைமை ஏற்படின் அதனை இரு மாதத்திற்கு முன்னரே சமாதான நீதிபதிக்கு அறிவித்து கொள்ளல் வேண்டும்.


இது தவிர தங்கள் குற்ற சாட்டில் நிரபராதி என நிரூபிக்க விபத்து நேரம் வாகனத்தில் இருந்த ஏனையோர், மற்றும் அரச தரப்பினால் அழைக்கப்படாத ஏனைய தனிநபர் சாட்சிகளை தாங்கள் தயார்படுத்தி அது தொடர்பான விபரங்களை சமாதான நீதிபதிக்கு முன் கூட்டியே சமர்பித்து அவர்களை தயார் செய்யலாம். சாட்சியாக வருபவர் எவருக்காவது நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளர் உதவி தேவையென்றால் அது பற்றி இரு கிழமைக்கு முன்னரே அறிவிக்கப்பட வேண்டியது குற்றம் சாட்டப்பட்வரின் கடமையாகும்.

குற்றம் சாட்டப்பட்டவர் தமக்கு ஏற்பட்ட விபத்தில் நிரபராதி என நிரூபிப்பதற்கு சாட்சிகளை இரு வழிகளில் அழைக்கலாம்.

1) நேரடியாக சாட்சியினையும், அவர் வழங்கும் சாட்சியம் தொடர்பான விபரங்களையும் நீதிமன்றத்திற்கு சமர்பித்து பரஸ்பரம் விருப்பத்துடன் அழைத்தல்.
2) நீதிமன்றத்தினால் கட்டிய அழைப்பானை வழங்கி அழைத்தல் (BY SUBPOENA)


முடி உதிர்வை தடுத்து மீண்டும் வளரச் செய்ய

ERVAMATIN



SABONA & GIFT

Tel: (416) 264-8787

2602B Eglinton Ave. East,
Scarborough, ON



கலைமகள் புத்தக நிலையம்

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494


எவராவது ஒரு சாட்சி நியமான ஒரு சாட்சி கூற கூடியவராக அழைத்து ஆனால் நீதிமன்றத்திற்கு சமூகம் அளிக்க தவறுபவராக இருந்தால் அது தொடர்பாக விசாரணைக்கு இரு மாதங்களுக்கு முன்னர் நீதிமன்றத்திற்கு சமாதான நீதிபதிக்கு அறிவிக்கலாம். இச் சாட்சியம் பற்றிய முக்கியத்துவம் தொடர்பாக ஒரு நம்பிக்கை சமாதான நீதிபதிக்கு ஏற்படுமானால் அச் சாட்சி தொடர்பான பெயர், விலாசம் போன்ற விபரங்களை தங்களிடம் வெற்று கட்டிய சாட்சிக்கு வருமாறு நீதிமன்றத்தினால் ஒரு அழைப்பு ஆணை அனுப்புவார்கள். இவ் அழைப்பு ஆணை என்பது நீதிமன்றத்திற்கு ஒரு சாட்சியினை சாட்சியமாக அழைப்பதாகும். இக்கட்டாய நீதிமன்ற அழைப்பாணையினை ஒரு சாட்சி வழங்க வோண்டியவர் நிராகரிப்பவராக இருந்தால் $200 டொலர் உரை தண்டனை பணமும் 30 நாட்கள் சிறை அனுபவிக்கும் தண்டனைக்கும் உள்ளாகலாம்.

தொடரும்.....



மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் — (416) 321–0999

(Professional Licensed Instructor In Car & Class Room)

## பழந்தமிழர் கலாச்சாரமும் – அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:– 01

*-Dr. Moorthy*



உலகம் முழுவதும் இன்று மாற்றீட்டு மருத்துவமுறைகளை (ALTERNATIVE MEDICINE) நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நாட்டிலும் புதுப்புது மருத்துவ நிலையங்களும் கல்லூரிகளும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அக்குபங்சர் (ACUPUNCTURE MEDICINE), ஹோமியோபதி (HOMEOPATHY), ஒஸ்டயோபதி (OSTEOPATHY), அரோமாதுரோபி (AROMA THERAPY), மூலிகை மருத்துவம் (HERBAL MEDICINE) இப்படியான பலவிதமான சிகிச்சை முறைகள் பிரபலமடைந்து வருகின்றன. நவீன மருத்துவம் பல[illegible]ளிக்காத நீண்ட கால நோய்கள் பல இம் முறையால் குணமடைவதைக் கா[illegible] கூடியதாகவுள்ளது.

இம்முறைகளில் நவீன மருத்துவ உலகமும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் புகழ் பெறுவது சீன வைத்திய முறையான அக்குபங்சர் (ACUPUNCTURE) சிகிச்சை முறையாகும். மிகமெல்லிய ஊசிகளினால் உடலின் சில குறிப்பிட்ட இடங்களில் (MERIDIANS) குத்துவதன் மூலம் பலவிதமான நோய்களைக் குணமாக்கலாம் என நிரூபிக்கப்பட்டுள்ளது. ஊசி மருந்து (INJECTION) போல இச் சிகிச்சை வலிமிக்கதல்ல. குழந்தைகளும் தாங்கக் கூடிய மிகக் குறைந்த வலியுணர்வே ஏற்படுகின்றது. அத்துடன் மிகக் குறைந்தளவு மின்சார சிகிச்சையும் (ELECTRO ACUPUNCTURE) லேசர் கதிர் சிகிச்சையும் (LASER THERAPY) தற்போது எங்கும் பிரபலமடையும் சிகிச்சை முறைகளாகும். ஏறக் குறைய சுமார் 2000 ஆண்டுகளாக சீனாவில் இச் சிகிச்சை முறை கைக் கொள்ளப்பட்டு வந்தாலும் மாசேதுங் அவர்களின் புரட்சிக்குப் பின்னரே இது பரந்த அளவில் நவீனமயப்படுத்தப்பட்டு அரச மருத்துவ மனைகளிலும் மேற்கொள்ளப்பட்டது. முன்னால் அமெரிக்க ஜனாதிபதி நிக்சனின் சீன விஜயத்தைத் தொடர்ந்தே இச் சிகிச்சை முறை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் பரவிப் பிரபலமடைந்தது. மேலை நாட்டு மருத்துவ உடற் கூறியலினின்றும் முற்றிலும் வேறான கொள்கைகளைக் கொண்டிருந்தாலும், தற்போது நவீன மருத்துவ உலகமும் ஏற்றுக் கெகாள்ளக் கூடிய நிலையை எட்டியிருப்பது நோய் தீர்க்கும் இதன் தன்மைக்கு சான்றுபகர்கிறது. உடலின் சில குறிப்பிட்ட மர்ம நிலைகளினூடாக பாய்ந்து கொண்டிருக்கும் சக்தியானது (CHI) தடைப்படும் அல்லது பாதிக்கப்படும் போது நோய், வலி முதலானவை தோன்றுகின்றன என்பதே இதன் அடிப்படைத் தத்துவமாகும். இச் சக்தி இரு மாறுபட்ட பிரிவுகளாக நேர், எதிர் (YIN-YANG) எனப் பாய்ந்து கொண்டிருக்கக்கின்றன. இவை இரண்டும் சமநிலையில் இருந்தால் நோயற்ற நிலையும் கூடிக் குறைந்தால் நோய் நிலையும் ஏற்படுகின்றது. எதிர் YIN எனும் பிரிவு பெண்மை. சந்திரனது குளிர்த்த தன்மை ஆகியவற்றை போன்றும் YANG என்பது அ[illegible]மை, கதிரவனது தன்மை, வெப்பம் ஆகியவற்றை ஒத்த தன்மைகளையும் [illegible]டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்து சமய தத்துவத்தில் சிவம், சக்தி ஆகிய இரண்டும் அடிப்படையாக உள்ளது போலவே இதுவும் அமைந்துள்ளது. இங்கு கவனிக்கத்தக்கது மின் சக்தியையோ, காந்த சக்தியையோ எடுத்துக்கொண்டாலும் கூடி நேர் (POSITIVE) எதிர் (NEGATIVE) ஆகியவை இணைந்து செயல்படுவதை காணலாம். ஆணும், பெண்ணும் சமமாய் இணைந்ததே வாழ்க்கை இதுவே வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவமாகும். இவை இரண்டில் ஒன்று கூடிக்குறைந்தாலும் சமநிலை மாறுபட்டு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

அக்குபங்சர் சிகிச்சையின் போது உடலின் உள் உறுப்புக்களுடன் தொடர்புடையதாகக் கணிக்கப்படும் சில குறிப்பிட்ட புள்ளிகளில் ஊசி செலுத்தப்படுகின்றது. பின்னர் சிகிச்சையாளர் இவ் ஊசியை திருகுவதன் மூலமும், மேலும் கீழும் அசைப்பதன் மூலமும் சக்தி தூண்டப்படுகிறது. தலைவலி, முதல் சத்திர சிகிச்சைக்காக நோயாளியை மயக்குவது வரையிலான பல்வேறுபட்ட நிலைகளுக்கேற்ப பாவிக்கப்படும் ஊசிகளின் அளவும், எண்ணிக்கையும் மாறுபடுகின்றது.

அக்குபங்சர் எப்படி வேலை செய்கின்றது என்பது பற்றி இன்னும் சரியான முறையில் புரிந்து கொள்ளப்படாவிட்டாலும் சில மேலை நாட்டு வைத்தியர்களின் கூற்றுப்படி உடலில் செலுத்தப்படும் ஊசிகள் உடலின் இழையங்களிலிருந்து வலியைக் குறைக்கும் சுரப்புக்களான ENDORPHINS ஐ சுரக்கச் செய்கின்றன எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பெண்களின் மாதவிடாய்க காலத்தில் ஏற்படும் வயிற்றுவலி கால்வலி ஒவ்வாமை (ALLEGES) போன்றவை இச்சிகிச்சை மூலம் நன்கு பலன் பெறக்கூடிய நிலைகளாகும்.

குணங்களை மட்டும் கருத்தில் கொள்ளாது முழு நோயாளியையும் கணக்கில் எடுத்தே சிகிச்சை ஆரம்பிக்கப்படுகின்றது. உடல்நலம், வாழ்க்கை முறை, நோய் வரலாறு, உணவு முறை ஆகியனபற்றி நன்கறிந்த பின்னரே சிகிச்சை பற்றித் தீ[illegible]னிக்கப்படுகின்றது. சில நேரங்களில் ஊசிகள் மட்டுமின்றி மொக்ஸா (M[illegible]XA) எனப்படும் மூலிகைகளின் நார்களைக் கொண்டு ஊசிகளினூடாக வெப்பம் செலுத்தப்படுகின்றது. நன்கு கிருமி நீக்கம் செய்யப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட மிக மெல்லிய கூரான ஊசிகளே பாவிக்கப்படுகின்றன. நோயிருக்கும் இடத்தில் அல்லாது முற்றிலும் வேறான பிறிதோர் இடத்தில் ஊசி செலுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்படுவது ஆச்சரியமான விஷயமாகும்.

பல்லாயிரம் ஆண்டுகளிற்கு முன்னரே இக்குறிப்பிட்ட புள்ளிகள் வரையறுக்கப்பட்டு விளக்கப்பட்டடுள்ளன. ஊசியை செலுத்தி உணர்ச்சியூட்டுவதன் மூலம் குறிப்பிட்ட பாதையினூடாக, சக்தி தடையின்றி பாய வகை செய்யப்படுகின்றது. 15 நிமிடம் முதல் 30 நிமிடம் வரை இவ் ஊசிகள் குறிப்பிட்ட இடத்தில் விடப்படுகின்றன. மூன்று முதல் பதினைந்து ஊசிகள் வரை உரு சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. நோயின் தன்மை, நோயாளியின் நிலை, முந்திய சிகிச்சையின் போது ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவை இவ் எண்ணிக்கையையும், நேரத்தையும் தீர்மானிக்க உதவுகின்றன. ஊசி செலுத்தும் போது ஓர் எறும்பு கடித்த வலியைவிடக் குறைவானது. சில இடங்களில் முற்றிலும் வலியே தென்படுவதில்லை. ஊசியின் கூர்மையும் அதிக ஆழத்திற்கு செலுத்தாமையினால் இரத்தமும் வருவதில்லை.

சிகிச்சைக் காலமும் இடைவெளியும் மாறுபட்டாலும் முதலாவது முறை ஒருமணி நேரம் செலவிடப்படுகின்றது. இது நோயாளிளைப்பற்றி அறிந்து சிகிச்சைபற்றித் தீர்மானிப்பதற்காகும்.




# T. R. S. AUTO

SPECIALIST TOYOTA HONDA

MOTOR VEHICLE SPECIALISTS

FOR REPAIR & BUY & SELL



OIL CHANGE SUNDAYS $12.99 Reg 14.99

உள்ளூர், இறக்குமதி செய்யப்பட்ட சகல ரக வாகனங்களுக்கும் அனுபவம் வாய்ந்த மெக்கானிக்குகளால் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்



- We Sell Quality Used Cars
- Licensed Mechanics on duty
- Guaranteed Services
- Reasonable Rates
- Free Visual Inspection and Proper Advice
- Licensed to do Air Condition Services
- We Rebuild Alternators & Starters
- Rust Proofing
- Body Work and paint


TUNE - UP •
BRAKES •
GENERAL MAINTENANCE •
ELECTRICAL WORKS •
ALL KIND OF REPAIRS •

OIL & FILTER CHANGE WITH CASTROL GTX

ALARM, STEREO, ELECTRICAL WORKS USED PARTS SALES, ETC.

We sell New & Used Tire
SPECIAL

| | |
|---|---|
| Wheel Balance & Tire Rotation | $22.99 |
| Front Brake Pad & Labour (Front Brake) | $59.99 |
| Rear BRAKE (Shoe & Labour) | $59.99 |




Call: Kumar

Tel: (416) 609-8110

86 MELFORD DR. UNIT 14



# J DAYCARE

- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

தினசரி நடவடிக்கைகள்-: உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு: Mrs. S.J. சௌந்தரநாயகம் (416) 502-3033

*(Finch/Birchmount) 151 Lamareaux Dr., TownHouse 99A, Scarboro. Ont. M1W 2J9*

# THE CHILDREN EDUCATION TRUST OF CANADA
(CET)

சீலன். A (சிவா)

TEL:(416) 451-0271 PAGER: (416) 980-9836

email: seelany2k@email.com

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் கல்விக்கான மானியம் வருடத்திற்கு $400 இலவசம்



அரச அங்கிகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம். (R.E.S.P)

THE ROYAL BANK
THE ROYAL TRUST
THE SCOTIA MCLEOD

TWO YEARS DIPLOMA ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

இன்னும் பல சலுகைகள் உண்டு

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்
நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால்
அதனால் பாதிக்கப்படுபவர்கள் நமது பேரக் குழந்தைகளே!

# விளையாட்டுத் தகவல்கள் (66)


-எஸ். கணேஷ்



## உதைபந்தாட்ட உலகில் விடிவெள்ளியாக மிளிரும் Pele க்கு வயது 60!

இன்றைய உதைபந்தாட்ட உலகில் பல வீரர்கள் வருகிறார்கள்! போகிறார்கள்! பலவீரர்கள் மில்லியன் கணக்கில் சம்பாதிக்கின்றார்கள். ஆனால் ஒருசிலரே ரசிகர்களின் மனதில் நீங்காத இடம் பிடிக்கிறார்கள். இந்த வரிசையில், ஜோன் குரோவ், பேக்கிம் பவர், மறடோனா, பிளற்னி, றோமேனிக்கே, பிலே, லூத்தர் மற்றியாஸ் ஆகியோர் இன்றும் ரசிகர்களின் மனத்தை விட்டு நீங்காத இடம் பிடிக்கின்றார்கள். இந்த வரிசையில் உதைபந்தாட்டத்தில் இன்றும் என்றும் விடிவெள்ளியாக மின்னும் நட்சத்திரமாக ஒளிப்பவர்களில் Pele முதல் இடத்தைப் பெறுகின்றார். ஒரு வீரனுக்குரிய அடக்கம், பணிவு, ஒழுக்கம் ஆகிய மூன்று பண்புகளும் தன்னகத்தே பெற்றவர் Pele என்றால் அது மிகையாகாது. இன்று எத்தனையோ இலட்சம் இரசிகர்களை விளையாட்டுத் திறமை மூலம் மட்டுமல்லாமல் தனது அன்பினாலும் கவர்ந்தவர். எத்தனையோ நோய்வாய்ப்பட்ட இளம் சிறார்களுக்கு இந்த நட்சத்திரம் இன்றும் உதவிகள் பல செய்து கொண்டுதான் இருக்கின்றது.

*1977ஆம் ஆண்டு Benz Car பரிசாக கொடுக்கப்பட்டது.*



மிகவும் வறிய குடும்பத்தில் Pele 1940 ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி Tres Coracoes என்னும் இடத்தில் தாயும் தனது மகன் டாக்டர் ஆக வரவேண்டும் என்று [illegible]தைப போல் Pele இன் தாயும் தனது மகன் Lawyer ஆக வரவேண்டும் என கனவு கண்டார். ஆனால் Diro என்ற அன்புப் பெயர் கொண்டு அழைக்கப்படும் Pele யோ உலகத்தில் தன்வழி தனி வழி என உதைபந்தாட்ட நட்சத்திரமாக மாறினார். ***"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்"***

தனது மகன் உலகத்தில் பெரும் நட்சத்திரமாக வந்த பொழுது தன்மகனைப் பெற்றபொழுது கொண்ட மகிழ்சியை விட பல மடங்கு மகிழ்ச்சி எய்தினார்.

**1962ஆம் ஆண்டு World Cup ஐ வென்ற வெற்றிக் களிப்பில் தாயார் உணவு**



உலகத்தில் 3 தரம் 1958, 1962, 1970 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் 'World Cup' கிண்ணத்தை வென்ற ஒரே ஒருவர் Pele ஆகும். 1956ஆம் ஆண்டு முதன் முதல் மிகப்பெரிய கழகமான Fc Saios இல் விளையாடத் தொடங்கினார். 1977ஆம் ஆண்டு Newyork Cosmos கழகத்தில் விளையாடி தனது உதைபநதாடட விளையாட்டை கடைசியாக ஆடி நிறுத்திக் கொண்டார். மிகவும் நம்பமுடியாத முதல் தர வரிசையில் இடம் பெறும் ஆட்டங்களில் 1281 கோல்களை 1363 முதல் தர ஆட்டங்களில் போட்டு உலக சாதனையை ஏற்படுத்தினார். உலகத்திலேயே முதலாவது வயது குறைந்த வீரராக 1958 ஆம் ஆண்டு 17வயதில் (Youngest World Cup Winner) வெற்றிக் கிண்ணத்தை பிரேசிலுக்காக வென்று கொடுத்தார். 1950ஆம் ஆண்டு Bauru Athletic கழகத்தில் இணைந்து கொண்டார். இவருடைய திறமையையும் வேகத்தையும் கருத்தில் கொண்டு 1956ஆம் ஆண்டு FC Satos முதல் (Professional Contract)ஐ கை எழுத்திட்டுக் கொண்டது. இவருக்கு அப்போது வயது 15. July 7ஆம் திகதி 1957ஆம் ஆண்டு பிரேசில் National Team இல் சேர்ந்துக் கொள்ளப்பட்டார். 1957ஆம் ஆண்டு ஆஜென்ரீனா நாட்டுடன் பிரேசில் மோதியதில் 1:2 என்று பிரேசில் வெற்றி கொண்டது. தனது முதல் ஆட்டத்திலேயே இரண்டு கோல்களை போட்டு பிரேசிலை வெல்ல வைத்தார்.

***1970ஆம் ஆண்டு World Cup ஐ வென்ற பின்பு தனது மகனுக்கு முத்தம் கொடுக்கின்றார்.***



***1281வது கோல்களை போடும் போது FC Saios அவரைக் கௌரவித்தது.***



July 18ஆம் திகதி 1971ஆம் ஆண்டு தனது 92 வது International ஆட்டத்தை 180,000 இரசிகர்கள் மத்தியில் Marrana Stadium தில் Rio நகரத்தில் "Good Bye To King Pele" என்று பல இலட்சம் இரசிகர்களின் ஆனந்தக் கண்ணீர் மத்தியில் தனது International ஆட்டத்தை நிறைவு செய்து கொண்டார். இவர் மிகவும் திறமையான தரத்தில் இருக்கும் போதே உதை பந்தாட்டத்தில் இருந்து இளைப்பாறினார். அதனால் இன்றும் இவ்நட்சத்திரம் இரசிகர்கள் மனதில் விடிவெள்ளியாகத் திகழ்கின்றது. 1994ஆம் ஆண்டு தொடக்கம் 1998ஆம் ஆண்டு வரை பிரேசில் நாட்டு விளையாட்டு துறை அமைச்சர் ஆகவும் கடமையாற்றினார்.

***1977ஆம் ஆண்டு உதைபந்தாட்டத்தில் இருந்து இளைப்பாறி வீடு வந்து தனது Gold கிண்ணத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.***





நகரின் மத்தியில் பெரியதோர் தமிழ் நிறுவனம்

**செறண்டிப்**

**(F)பிறஸ் மார்க்கட்**

நாளாந்த பாவனைக்கு தேவையான சகல பொருட்களையும் நாளாந்தம் மலிவு விலைகளில் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



**SERENDIB FRESH MARKET**

Tel: (416) **269-9913**

2631 Eglinton Ave. East, Scarborough, Ont. M1k 2S2


### திருமொழிகள்

* பசித்தோர் முகம் பார்த்திரங்கும் பண்பே சிறந்த அறம்.
* எத்துணையும் வேறுபாடு காட்டாமல், எவ்வுயிரையும் தம் உயிர் போல் எண்ணி, உளம் ஒத்த உரிமையுடையவராக வாழ்தல் வேண்டும்.
* எங்கும் கொல்லா நெறி நிலவ வேண்டும், துய நெறி பரவ வேண்டும், அருளாட்சி நிலவ வேண்டும்.
* இரக்கமுடைய நெஞ்சில் பகை, பொறாமை முதலிய தீயன நிலவுதல் அரிது.
* இரக்கமுடைய நெஞ்சினர்க்கும் பகைவரே இரார். நெஞ்சில் பகைமையுடையவர்க்கே பகைவர் இருப்பார்.

### Personal Prayer To The Holy Spirit

Holy Spirit Thou make me see everything and show me the way to reach my ideal. You who will give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favour has been granted.



Our Mother of Perpetual Help


தமிழர்கள் மத்தியில் பலவருட அனுபவம் மிக்கவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதோர் வெதுப்பகம்

**BREAD MASTER BAKERY**

**பிறட் மாஸ்ரர் பேக்கரி**

மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்



**றோஸ் பாண் கிடைக்கும்**

**பாண், பணிஸ், றோல்ஸ் அனைத்தும் சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.**

**3 for 0.99¢**

வாரத்தில் 7 நாட்களும்

**31 TAPSCOTT ROAD, UNIT #B3**

LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH

**TEL: (416) 299-5083**

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

–தொகுப்பு - பரம்

*1982ஆம் ஆண்டின் படங்களின் தொடர்ச்சி.......*



ஏற்கனவே எழுதியிருந்தது போல் இந்த ஆண்டு 119 தமிழ் படங்கள தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்தன. தமிழ்நாட்டின இன்றைய பல முன்னணி நடிக, நடிகையர்களின் படங்கள் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

1931ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த தமிழ்ப்படங்களைப் பற்றிய தகவல்களே இந்த தொடரில் வருவது 'உலக தமிழோசை' வாசகர்கள் அறிந்தது. இந்த ஆண்டு வெளிவந்த 119 படங்களின எண்ணிக்கையுடன இதுவரை வந்த மொத்த படங்கள் 2148 ஆகும். அதாவது 2029 இலிருந்து 2148 ஆக 119 ஆல் இந்த ஆண்டு படங்கள எண்ணிக்கையால் கூடியது. இந்த ஆண்டு இரண்டு கறுப்பு வெள்ளைப படங்களும் வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அவையாவன 1. காதலித்துப்பார். 2. நிழல் சுடுவதில்லை. ஊமைப்படங்களாகத் தொடங்கி கறுப்பு வெள்ளையாக உருவெடுத்த தமிழ் சினிமா உலகம் காலத்துடன பேசும்படமாகிய கலர்படங்களாக பரிமளித்தன. 1982, 1983 களிலும் ஒன்ற இரண்டு கறுப்பு வெள்ளைப்படங்கள் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



இந்த ஆண்டு, இன்றைய (2000) தெனாலி கமலஹாசனின் மூன்று முத்தான படங்கள் வெளியாகியிருந்தன. முறையே வாழ்வே மாயம், மூன்றாம் பிறை, சகலகலா வல்லவன். இந்த ஆண்டும கமலஹாசனிற்கு ஒரு சிறந்த ஆண்டாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. 1947ஆம் ஆண்டு உருவாக்கிய ஏவி எம் நிறுவனத்தின தயாரிப்பாக சகலகலாவல்லவன வெளிவந்தது. வியாபார ரீதியில் இப்படம் ஏவி எம் நிறுவனத்திற்கு மிகப்பெரிய வெற்றிகளைக் கொடுத்தது.

இவ்வாண்டு ரஜினியின் 6 படங்கள வெளிவந்தது. டி. ராமா நாயுடுவின 'தனிக்காட்டு ராஜா', ஏவி, எம் மின் 'போக்கிரி ராஜா', தேவர் பிலிம்ஸின் 'ரங்கா', பாலசந்தரின் கவிதாலயம் நிறுவனத்திற்காக எஸ். பி முத்துராமன் இயக்கிய 'புதுக்கவிதை', பஞ்சு அருணாசலத்தின் 'எங்கேயோ கேட்ட குரல்', சத்யா மூவீஸாரின் 'மூன்று முகம்" ஆகிய படங்கள் வெளிவந்தன.

இந்த ஆண்டில் வெளிவந்த எல்லாப் படங்களுமே ரஜினியைப் பொறுத்தவரை வெற்றிப் படங்களாக அமைந்தன! காரணம், ஒவ்வொரு பட்த்திலும் அவருக்கு அருமையான கேரக்டர்கள் அமைந்ததுதான்!

தனிக்காட்டு ராஜாவைத் தவிர மீதி ஐந்து படங்களும் நூறு நாட்களைத் தாண்டி ஓடின. பஞ்சு அருணாசலம் எஸ் பி முத்துராமன் இணைந்து அளித்த 'எங்கேயோ கேட்ட குரல்" படத்தில் ரஜினிகாந்த 'ஆறிலிருந்து அறுபதுவரை' படத்தில் ஏற்றிருந்தது போன்ற அருமையான பாத்திரத்தில நடித்துப் பெயரும் புகழும் பெற்றார்! தாம் இதுவரை நடித்த படங்களிலேயே மிகவும் சிரமப்பட்டு நடித்த படம் இதுதான் என்பது ரஜினிகாந்தின் கருத்து!

'மூன்று முகம் படத்தில்' அவர் ஏற்ற மூன்று வேடங்களில் 'அலெக்ஸ் பாண்டியன்' என்ற போலீஸ் அதிகாரியின் வேடம் பொதுமக்கள் மத்தியில் மிகவும் பரபரப்போடு வரவேற்கப்பட்டது. அந்த மிடுக்கு நடையும், மின்னல் வேகமும், கம்பீரமும், துடிப்பும், புலிப் பாய்ச்சலும், சகல பத்திரிகைகளாலும் பாராட்டப்பட்டன. அதில நடிக்க இன்ஸ்பிரேஷன் ஏதாவது உண்டா? என்ற கேள்விக்கு ரஜினி அளித்த பதில்:

'தங்கப்பதக்கம்' படத்தில் சிவாஜி சார் நடிப்பு; பெங்களூர் பொலீஸ்அதிகாரி ஒருவர். அவர் ரொம்பக் கெடுபிடியான ஆபீசர். தப்பு செய்யறவங்களுக்கு அவர் சிம்ம சொப்பனம்! அந்த அதிகாரியை வாட்ச் பண்டிய அனுபவம். இங்கிலீஷ் படங்கள்ள வரும் சில பொலீஸ் ஆபீசர்களின் ஸ்டைல்கள்! அது மட்டுமில்ல; எனக்கு ஓர் இமேஜினேஷன் இருந்தது. செஞ்சேன் கிளிக் ஆயிடுச்சு."

நடிகை ராதிகாவுக்கு 1981ஆம் ஆண்டில் அடித்தது ஒரு யோகம். மூன்று படங்களில் ரஜினியின் ஜோடியாக நடிக்கும் வாய்ப்பு கிட்டியது. 1982இல் வெளியான, 'ரங்கா', 'போக்கிரி ராஜா', 'மூன்று முகம்' மூன்றும வெற்றிப்படங்களாகவும் அமைந்ததில் அவருக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி!

(1982 - தொடரும்)

## வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றி பெறும் முதல் மூவருக்கு வேலவன் பிலிம்ஸ் ஸ்தாபனத்தார் 3 இலவச ரிக்கற்றுக்கள் வழங்கப்படும்?



**சினிமா போட்டி # 2**

1. "அன்புடன்' படத்தின் கதாநாயகன் பெயர் என்ன?
2. 'கண்ணுக்கு கண்ணாக' படத்தின் டைரக்டர் யார்?
3. கமலஹாசன், இலங்கைத் தமிழ்பேசி நடித்த படம் எது?

** கடந்த சினிமாப் போட்டியின் விடைகள்*

1. கே.எஸ். ரவிக்குமார்
2. சிம்ரான்
3. ரஜினிகாந்

***போட்டி #1இல் வெற்றி பெற்றவர்கள்**

1. S. Mayuran
2. திருமதி M. பரந்தாமன் (ஸ்காபரோ)

இதற்குரிய விடைகளை December 15, 2000 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் விலாசத்திற்கு அனுப்பவும். அல்லது தொலைநகல் (Fax: (416) 282-4978) மூலம் அனுப்பலாம்.


**Neelam SILK**

**நீலம் சில்க்**

உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்



- முகூர்த்தப்பட்டுப் புடவைகள் * பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread work பட்டுப்புடவைகள் * ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள் * Emboss Tissue சேலைகள்
- Cut work சேலைகள் * அபூர்வா 2000 cut work

மைசூர் சில்க் சேலைகள். சோனா. மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் தரமான பட்டுப்புடவை மாளிகை"

'நீலம் சில்க்'

TEL: (416) 778-7455 FAX: (416) 778-8484

1453 GERRARD STREET EAST (INDIAN Bazzar)



### பொன்மொழிகள்

* கடவுளுக்காக அனைத்தையும் துறப்பவன் நடமாடும் கடவுளாகின்றான்.

* பணத்தை இழந்தால் குறைந்த இழப்பு. நேரத்தை இழந்தால் எல்லாமே இழப்பு

# 21 ஆம் நூற்றாண்டில் கணனி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

–ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
*Computer consultant*



பகுதி 22
கணனியுர் காலமர்

கடந்த இதழில் internet மூலமாக E-commerce பற்றிய விடயங்களைப் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக அதற்கு பின் இணையப்பக்கம் இல்லாத ஒரு தனி மனிதனே இல்லையென்று ஒரு காலம் வரும்.

முன்பெல்லாம் ஒரு நிறுவனத்தையோ அல்லது தனிமனிதனையோ அல்லது பொருளையோ பற்றி தெரிந்து கொள்வதற்கு நீங்கள் அந்த இடத்திற்கு செல்ல வேண்டும் அல்லது அங்கிருந்து அந்த பொருள் பற்றிய விபரங்கள் வருவதற்கு காத்திருக்கவேண்டும் அல்லது அதற்கு நீங்கள் சில பொருட் செலவு செய்ய வேண்டும். ஆனால் இப்பொழுது இந்த internet இணைய வாயிலாக இந்தத் தேவைகள் அதாவது ஒரு தனி மனிதனுடைய விபரங்கள் அல்லது ஒரு நிறுவனத்தின் விபரங்கள் அல்லது ஒரு பொருள் பற்றிய விபரங்கள் அல்லது ஒரு செய்திகள் போன்றவற்றை உடனுக்குடன் மிக எளிமையாக மிக அருமையாக விபரமாக காண்பதற்கு வாய்ப்பு தந்தது தான் இந்த internet என்ற உலகம். இந்த internet என்ற ஒரு துறை வந்தவுடன் கணணியின் பொற்காலம் என்றுதான் சொல்லவேண்டும். கணணியின் பயன்பாடுகள் மிக சாதாரண மக்களிற்கு கூட சென்றடைய இந்த internet கணணியின் உலகத்திற்கு கிடைத்த பெரிய திருப்புமுனை. Internet ஐ பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவே கணணி வாங்குபவர்களை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். மொத்தத்தில் சொல்லப் போனால் internet என்ற இந்த விஞ்ஞானம் உலகத்தை சுருக்கிய ஒரு சக்தி, உலகத்தை சிறிதாக்கி உங்கள் முன் கொண்டு வந்துள்ளது. இந்த உலகத்தில் சாதாரண வாழ்க்கை வாழ நிர்ப்பந்தத்தில் ஒரு மனிதன் கணணி தெரியாமல் இருக்க முடியாது, தெரியாமல் வாழமுடியாது என்பதுதான் வரப்போகின்ற உண்மை. நூறு ஆண்டுகளுக்கு முன் தொலைபேசிச் சேவையை இப்படித்தான் சொல்லிக் கொண்டு இருந்தார்கள். தொலைபேசி என்பது வாழ்க்கைக்கு மிக முக்கியம். அது இல்லாமல் வாழ முடியாது என்று சொன்னது அன்று உள்ள மக்களுக்கு அது ஆச்சரியத்தை கொடுத்து இருக்கலாம். இது எவ்வளவு உண்மை என்பதை இன்று நீங்கள் உணருவீர்கள். இதைப்போல் இன்று சொல்லக் கூடிய internet எவ்வளவு முக்கியத்துவம் என்பதை நான் சொல்லும் பொழுது இன்னும் நூறு ஆண்டுகளுக்கு பின்தான் இதனுடைய உண்மையான சக்தி உங்களுக்கு தெரியும். உங்களுக்கு தெரியாவிட்டாலும் உங்கள் சந்ததியினருக்கு தெரியப்போகின்றது. சாதாரண வாழ்க்கையில் ஒரு அங்கமாக அதாவது மனிதனுக்கு உணவு முக்கியம் உடை முக்கியம் போக்குவரத்து சாதனம் முக்கியம். அதேபோல தொலைத்தொடர்பு சாதனம் என்பது இந்த internet வலை. இதைப் பயன்படுத்தும் கணணியானது சாதரண ஒரு வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறிக்கொண்டு இருக்கிறது. உண்மையாக மாறிவிடும்.எனவே தான் உங்களுடைய வயது அல்லது உங்களுடைய நிலைமை அல்லது உங்களது வசதிவாய்ப்பை, தவிர்த்து தெரிந்து கொள்ளவேண்டும் என்பது மிக முக்கியம் என்று நான் கருதுகிறேன். எந்த ஒரு நிகழ்ச்சியிலும் அல்லது கணணி பற்றிய நிகழ்ச்சியிலும் internet ஐப் பற்றி சொல்லாமல் இருப்பதில்லை. ஆகவே காலத்திற்கு ஏற்ப வாழப்பழகிக் கொள்வது புத்திசாலித்தனம்.

## Computer உம் Digital camera உம்



Camera என்றால் நிழல்ப்பட கருவி (Film roll) இப்பொழுது கூட பயன்படுத்தப்படுகின்றது. Film roll ஒன்றை போட்டு அதில் கெமிக்கல் அதாவது இரசாயன வேறுபாட்டு முறை இது. அதை ஒளிப்பதிவு செய்து அந்த இரசாயனங்களை கொண்டு கழுவி அந்த படத்தை Negative என்று சொல்லப்படும் film இல் எடுத்து அதை ஒரு positive paper இல் வைத்து பதிவு செய்து படங்களை கொண்டு வந்தது ஒரு காலம். ஆனால் இப்பொழுது Digital Camera உலகம் அதாவது Digital camera என்பது film கள் அதாவது படச்சுருள்கள் தேவை இல்லை. இதற்குப் பதிலாக memory அது கணணியில் பயன்படுத்தப்படும். அதேபோல memory இந்த camera க்களிலும் இருக்கின்றது. இந்த memory இன் நமது படங்கள் Digital signal களாக மாற்றப்பட்டு இந்த memoryஇல் பதிவு செய்யப்பட்டு இந்த memory இல் இருந்து திரும்ப கணணிக்கு எடுக்கப்பட்டு அங்கு படங்களாக பார்க்க வசதியாகவும் பின்பு அதிலிருந்து print செய்வதற்காகவும் வடிவமைத்த ஒரு விடயம் தான் Digital camera.

தொடர்...


**SYSTEM PLUS**
www.systemsplus.net
T.P (416) 321 - 5995

இதில் வரும் சந்தேகங்களையோ அல்லது எந்தத் துறைறைப் பற்றி எழுதலாம் என்று நினைக்கிறீர்களோ என்பதைப் பற்றி "உலக தமிழோசை"க்கு நீங்கள் அறியத்தரவும்.
vlambaram.@email.com


### விடுகதை

1. கையில் இணைந்தபடி காலம் காட்டுவான் அவன் யார்? கடிகாரம்
2. அன்று கறுப்புக் கம்பி இன்று வெள்ளிக்கம்பி அவன் யார்? தலைமுடி
3. இனிப்பானவன் பிறகு புளிப்பானவன். அதன் பிறகு "மணம்"அவன் யார்? பால்-தயிர்--நெய்
4. உரசினால் போதும் உயிர் போய் விடும் அது என்ன? தீக்குச்சி

புதிய இடத்தில் புதுப்பொலிவுடன்
**NEW Technology**
Security and Sound Inc.
Car Alarm, Remote car starter, LED scanner, Stereo, Fog lamps And Sports Accessories.
Sales And Installation



SPECIAL













உங்களுக்கு தேவையான அனைத்தையும் பொருத்திக்கொள்ளவும் பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள்
Tel:(416)335-4070 Fax:(416)335-9936
Ratheesh Cell:(416)451-0287 Shanger Cell:(416)451-4517
3501 McNicoll Ave., Unit # 9. Scarborough, Ont. M1V 2N3

**EZ DRIVING SCHOOL**



நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்
JEYAKUMAR ✆ (416) 283-4100 Cell: 822-6741
(10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)

**ரதீக்கா நகை மாளிகை**

- உங்கள் விருப்பமோ குறைந்த விலையில் வாங்குவது, எங்கள் விருப்பமோ இனிமேல் யாரும் குறைக்க முடியாத விலையில் தருவது
- உங்கள் விருப்பமோ குறித்த தவணையில் பெறுவது, எங்கள் விருப்பமோ ஒருநாள் ஏனும் முந்தியே தருவது
- உங்கள் விருப்பமோ இந்த நகைகளை எங்கே வாங்கியது என நண்பர்கள் கேட்பது, எங்கள் விருப்பமோ ரதீக்காவில் வாங்கியது என நீங்கள் பெருமையுடன் சொல்வது
- தாலிக்கும் நகைகளுக்கும் ஓடர் கொடுத்தாச்சு, காரை எடு இனிக் கூறை அலுவலைப்பார்ப்பம் என்று அலைய வேண்டாம். ரதீக்கா நகைமாளிகையும் மஞ்சுளா பஷனும் ஒரே இடத்தில்.
- இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான காட்சியறையில் ரதீக்கா நகைமாளிகை உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

ரதீக்காவின் புதிய விலாசம்
RATHICKA JEWELLERY
5635 Finch Ave. East, Unit 3, (Finch and Tapscott)
Scarborough, Ontario, M1B 5K9, Canada
Tel: (416) 299-1343

# விண்வெளி

## சூரியக்குடும்பம்:- 51

தருபவர்:- கனி

இது வரையில் சூரியக்குடும்பம் பற்றி விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் பார்த்தோம். மீண்டும் ஒரு தடவை மிகச் சுருக்கமாக அதன் அமைப்பைப் பார்ப்போம்.

இன்று சூரியக்குடும்பம் இருக்கும் இடத்தில் - அதாவது நாமும் நமது பூமியும் சூரியனும் உள்ள இடமெல்லாம் சுமார் 41/2 பில்லியன் (Billion) வருடங்களுக்கு முன் வெறும் தூசிக் கூட்டம் மட்டுமே இருந்தது. இதனை சூரிய நெபுலா என்பர். இந்தச் தூசுக் கூட்டம் ஒன்றிணைந்து சூரியன் என்ற எமது நட்சத்திரத்தினைத் தோற்றுவித்தது. சூரியன் தோன்றி 41/2 பில்லியன் வருடங்கள் ஆகிவிட்டது என்கிறார்கள். வெறும் ஐதரசனையும் ஈலியத்தையும் கொண்டுள்ள சூரியன் பெரும் சக்தியின் உற்பத்தித்தானம். எல்லாவகையான சக்திகளையும் சூரியன் வெளி வீசிக் [illegible]ாண்டு உள்ளது. பால்வெளி எனும் கலக்சியில் அதன் ஐந்தாவது [illegible]கின் ஒரு ஓரத்தில் மிகச் சிறிய புள்ளி போன்று எமது பிரமாண்டமான சூரியன் உள்ளது.


சூரியன் தோன்றியபோது அதன் பக்க விளைவாக சூரிய நெபுலா என்ற தூசுக் கூட்டத்தில் இருந்து சூரியனின் ஒன்பது கோள்களும் அவற்றின் துணைக் கோள்களும் சூரியன் தோன்றிய அதே காலத்தில் தோன்றின என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். அதன்படி எமது பூமியின் வயது 41/2 பில்லியன் வருடங்கள். முற்றுப் பெறாத தூசுத் திரட்சிகள் சூரியனின் வீசுகதிர்ச் சக்தியால் வெளித்தள்ளப்பட அவை சூரியனில் இருந்து வெகு தொலைவில் தள்ளப்பட்டுவிட்டன. தூசுக்கள் அண்ட வெளியினுள் தள்ளப்பட, சிறிய பொருட்கள் எல்லாம் அத் தொலை தூரத்தில் இருந்து சூரியனை வலம்வரத் தொடங்கின. வேறு சில பாரமான பொருட்கள் சூரியத் தொகுதியின் உள்ளே தங்கி விண்கற்களாக மிதக்கத் தொடங்கின.

சூரியனின் ஒன்பது கிரகங்களையும் இரண்டு வகையாகப் பிரிக்கின்றார்கள். புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகிய நான்கும் "பாறை உலகங்கள்" ஆகும். இறுக்கமான அடர்ந்த இந்தக் கோள்கள் இரும்பு, நிக்கல், செம்பு போன்ற உலோகங்களையும், இறுக்கமான பாறை போன்ற மேற்பகுதியையும் கொண்டுள்ளன. அடுத்துக் காணப்படும் வியாழன், சனி, யூரேனஸ், நெப்ரியூன் என்ற நான்கு கோள்களும் "வாயு உலகங்கள்" ஆகும். இவ் வாயுக்கள் திரவ வடிவிலேயே செறிந்து காணப்படுகின்றன. இக் கோள்களைச் சுற்றிப் பட்டை பட்டையாகப் பல வளையங்கள் காணப்படுகின்றன. அடர்த்தி குறைந்த இந்த உலகங்களை அடுத்து புளூட்டோ என்ற மிகச் சிறிய உலகம் சூரியனின் ஒன்பதாவது கிரகமாகக் காணப்படுகிறது. இது பாறை [illegible]கமாகவும் இல்லாது, வாயு உலகமாகவும் இல்லாது வெறும் பனி உலகமாகக் காணப்படுகிறது. இந்த ஒன்பது கோள்களையும் விட வேறும் கோள்கள் இருக்கலாம் என விஞ்ஞானிகள் ஐயுறுகின்றார்கள்.

சூரியனுக்கும் புதனுக்கும் இடையில் "வல்கன்" என்றொரு சிறிய கோள் இருக்கலாம் என்பது சிலரது அபிப்பிராயம். சூரியனுக்கு மிக அண்மையில் இருப்பதனால் சூரியனின் பிரகாசம் "வல்கன்" என்ற கோளை எமக்குத் தெரியவிடாமல் தடுக்கிறது என அவர்கள் கூறுகின்றார்கள். புதனின் மாறுபட்ட இயக்கத்தை அதற்கு காரணமாகக் கூறுகின்றார்கள். புதனின் புதிரான இயக்கத்திற்கு சரியான விளக்கத்தை அயன்ரைன் கொடுத்தபோதும் இவர்கள் தமது அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. இதே போலவே புளூட்டோவின் தாறுமாறு போன்ற இயக்கத்திற்கும் புளூட்டோவுக்கு அப்பால் உள்ள ஒரு கோளின் செல்வாக்கே காரணம் என ஐயுறும் சில விஞ்ஞானிகள் இன்றும் கூட அந்தக் காணாதா உலகத்தைத் தேடி அலைகின்றார்கள். சிலவேளைகளில் அவர்களது முயற்சி பலனின்றி புதியதொரு கோளை உலகத்திற்கு அறிவிக்கலாம். ஏனெனில் ஒரு காலத்தில் யூரேனசும், நெப்ரியூனும், புளூட்டோவும் அறியப்படாத கிரகங்களாகவே இருந்தன என்பது எமக்குத் தெரியும்.

மிகுதியை மீண்டும் அடுத்த தடவையில் பார்ப்போம்.....


YARLCAN
STEAM CLEANING




உங்கள்
சகலவிதமான
CARPET
CLEANING
தேவைகளுக்கும்
DUCT CLEANING
தேவைகளுக்கும்
அழையுங்கள் மோகன்
Tel: (416) 724-9085
Cell. 721-9709



YARL
WINDOW COVERING
1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

CUSTOM MADE..
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES




இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் திரைச் சேலைக் தைத்தக் கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE





ELECTRICAL REPAIRS
உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள், ரேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்
முருகதாஸ் - ☎ 261-6883



நான் ஒரு வழக்கறிஞர் இல்லை!




கலகலப்பு தீசன்
416-631-6322




# மகாராஜாஸ்

**CASH & CARRY, WHOLESALE**

**IMPORTERS, EXPORTERS, DISTRIBUTORS FOR EXCLUSIVE PURE SILK SAREES, CANADA - EUROPE.**

வண்ணக் கலவைகளின் வடிவமைப்பில்
எண்ணற்ற டிசைன்களை எழில் மிகு
கோலமாய்அள்ளித் தருபவர்கள்



# MAHARAJAS

**FOR WHOLESALE CONTACT MOHAN**

## (416) 284-6406

## (416) 727-0643

## மொத்த விற்பனையாளர்கள்

- KIBS சாரம், லுங்கி வகைகள்
  4,8,9, முழம் சகலவிதமான வேட்டி சால்வைகள்
  2001 ஆண்டிற்கான Latest Designs , Seequence Beats, Glass Fancy சேலைகள்

- கொட்டன், கோட்டா Shifon சாறிகள், சேலைகள், சுவாமிப்பட்டு, சுவாமி அலங்கார சேலைகள், மற்றும் பஞ்சாபி சூட், சல்வார் கமிஸ் வகைகள்

- கோலம், காயத்ரி பிரிண்ட், றங்கோலி சாறிகள்
  Soft Tissue பனாரஸ் சேலைகள்
  மிலேனியம் New Print Latest டிசைன் சேலைகள், with blouse pcs

